# ஸியா செய்யுங்க...

## வீட்டை அழகாக்குங்க...

இந்த வாரம் வித்தியாசமான கொட்டைப் பாக்கு விநாயகர் எப்படி செய்யறதுன்னு பார்க்கலாம். இதை நமக்கு சொல்லிக் கொடுக்கப் போறவங்க பூமாதேவி.



# கொட்டைப்பாக்கு விநாயகர்

**தேவையான பொருள்கள் :**

உடைக்காத முழு கொட்டைப் பாக்கு : தேவைக்கு

வெள்ளை எம்.சீல் : ஒரு பாக்கெட்

மெட்டாலிக் பேப்ரிக் பெயிண்ட்: தேவையான நிறங்களில்

வார்னிஷ்: தேவைக்கு

பிரஷ்: தேவைக்கு

பெரிய ஊசி: 1

டபுள் கம் டேப்: தேவைக்கு

முகப் பவுடர்: தேவைக்கு

சின்ன கத்தி: தேவைக்கு

**செய்முறை:**

முகப்பவுடரை கையில் கொட்டிக் கொண்டு எம்சீலை தேவையான அளவு எடுத்து சின்ன சின்ன உருண்டைகளாக உருட்டவும்.

அதன்பின் கொட்டைப் பாக்கை எடுத்துக் கொண்டு அதன் மேற்ப்பகுதியில் எம்சீல் உருண்டைகளில் சம அளவுள்ள மூன்றை எடுத்து '०॰' வடிவம் தலைகீழாக இருப்பது போல் கொட்டைப் பாக்கில் வைத்து அழுத்தி ஒட்டவும்.

அதன்பின்னர் கீழ்பகுதியில் இருக்கும் ஒரு உருண்டையின் கீழ் இரண்டு சின்ன எம்சீல் உருண்டைகளை எடுத்துக் கொண்டு விநாயகருக்கு கால் போல் நீளமாக இழுத்து ஒட்டவும். அடுத்து மேலே இருக்கும் இரண்டு எம்சீல் உருண்டைகளின் நடுவில் முகம், தும்பிக்கை வருவது போல் வளைவாக ஒட்டி, அதன் மேற்ப்பகுதியில் விநாயகரின் தலைக்கு கிரீடம் போல் எம்சீலை ஒட்டவும். இவையனைத்தையும் ஒட்டிய பிறகு ஊசி கொண்டு எம்சீலின் மேலே லேசாக கீறி விடவும்.

இவை நன்கு காய்ந்த பிறகு பேப்ரிக் அல்லது மெட்டாலிக் பெயிண்ட்டை பாக்கு, எம்சீல் முழுவதும் பிரஷால் அடிக்கவும். இதை ஒருமணி நேரம் காயவைத்து பிறகு வார்னிஷ் அடித்து காயவிடவும். அதன்பிறகு டபுள் கம் டேப்பை சிறிய துண்டாக்கி அதனடியில் ஒட்டி தேவைப்படும் இடங்களில் ஒட்டிவிடவும்.







இப்போது அழகிய கொட்டைப் பாக்கு விநாயகர் தயார்.

**இதை செய்யும் போது கவனிக்க வேண்டியவை :**

★ எம்சீல் இருவேறு நிறமாக பாக்கெட்டில் இருக்கும். அதை சமமான அளவு எடுத்து பிசைந்தால் மட்டுமே பயன்படுத்த முடியும். ஏதெனும் ஒன்று குறைந்து மற்றது அதிகமாகிவிடுமானால் பயன்படுத்த முடியாது.

★ எம்சீலை தேவையான அளவுக்கு மட்டும் எடுத்துக் கொள்ளவும். இல்லையென்றால் மிக விரைவில் இறுகிவிடும்.

★ எம்சீலை பிசையும் போது முகப்பவுடரை சிறிதளவு கையில் கொட்டிக் கொண்டு செய்யவும். இல்லையெனில் நமக்கு வேண்டிய வடிவம் வராது. கையிலும் ஒட்டிக்கொள்ளும்.

★ முழு கொட்டைப் பாக்கு வேண்டுமானால் பாக்கு அல்லது சீவல் கடைகளில் சொல்லி வைத்து வாங்கிக் கொள்ளலாம். அப்போதுதான் நார்கள் இல்லாமல் சுத்தமானதாகவும், முழுதாகவும் கிடைக்கும்.

★ கொட்டைப் பாக்கில் எம்சீல் வைத்து எந்த உருவம் செய்தாலும் கண்டிப்பாக வார்னிஷ் அடிக்க வேண்டும். இல்லாவிடில் பூச்சி அரித்துவிடும்.

★ கொட்டைப் பாக்கில் எம்சீல் கொண்டு நமக்கு வேண்டிய வடிவங்களை செய்துகொள்ளலாம். இதை ஒட்டுவதற்கு தனியாக பசை எதுவும் தேவைப்படாது. இதிலிருக்கும் பசையே போதுமானது.

★ எம்.சீல் இரண்டு நிறங்களில் கிடைக்கிறது. கருப்பு நிற எம்சீலை பயன்படுத்தும் போது இரண்டு மூன்று கோட்டிங் பெயிண்ட் பண்ண வேண்டும். அப்போதுதான் கருப்பு நிறம் வெளியில் தெரியாது. கொடுத்த நிறமும் பளீச்சென தெரியும்.

★ இதை சுபநிகழ்ச்சிகளில் தாம்பூலத்தில் வைத்தும் கொடுக்கலாம்.

-சங்கீதா..

படங்கள்-ராஜன்.